1992 மார்ச் 24]

ரேஷனிலே அரிசி விலையை உயர்த்தியிருக்கிறோம்; பாமாயில் விலையைக் உயர்த்தியிருக்கிறோம். அந்த ரேஷனுடைய உணவு பொருட்களைத்தான் விடுதிக்கு வாங்க வேண்டிய சூழ்நிலை இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. அதைக் கருத்திற் கொண்டு, தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு பகுதியிலே இருக்கின்ற ஆதி திராவிடர் மாணவர்கள் தங்கியிருக்கின்ற மாணவர்கள் விடுதிகளிலே சுகாதாரக் கேடுகள் அதிகம் இருந்தாலும், உணவு என்பது சிறைச்சாலையிலே கொடுப்பது போன்று அச்சுச்சோறு கொடுக்கின்ற ஒரு நிலையை நான் காண்கிறேன். அந்த நிலையை மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வயிறார உண்ண வேண்டும் என்ற காரணத்தினாலே அந்த உதவித் தொகையை உயர்த்தித் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி விலையை மத்திய அரசுதான் உயர்த்தியிருக்கிறது. அதேபோல மாநில அரசு மத்திய அரசு கொடுக்கும் பாமாயில் விலையை விடக் குறைத்துத்தான் தந்து கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 336. திரு. தேனி பன்னீர்செல்வம் இருக்கையில் இல்லை.

வினா எண் 321—திரு. செ. கு. தமிழரசன் மாண்புமிகு கல்வி அமைச்சர்.

321—

வந்தவாசி பகுதியில் அரசுக் கல்லூரி

* 141 — திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) வந்தவாசி பகுதியில் அரசுக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 மார்ச் 24

முற்பகல் 10-35

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள வந்தவாசி வட்டம், மிகவும் பின்னடைந்த வட்டம். நூற்றுக்கு தொண்ணூறு விழுக்காடு சமுதாயத்திலே பின்தங்கிய மக்களை உள்ளடக்கியும், தொழிலாளர் மக்களைப் பெரிதும் உள்ளடக்கியும் உள்ள வட்டம் அது. அங்கே மாணவர்கள், மேற்கல்வி பெற வேண்டுமானால், பக்கத்து மாவட்டமான செங்கை மாவட்டத்திற்கு அல்லது தென்னாற்காடு மாவட்டத்திற்குப் போக வேண்டிய நிலை இருக்கிறது. அதிலும், குறிப்பாக பெண்கள் வேறு மாவட்டத்திற்குத்தான் போய் பயில வேண்டிய நிலைமை இருக்கிறது. சம்புவராயர் மாவட்டத்தில் ஒரு கல்லூரிகூட கிடையாது. எனவே, குறைந்த பட்சம் ஒரு பெண்கள் கல்லூரியையாவது தொடங்குவதற்கு அரசு தனிப்பட்ட முறையிலே முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தற்போது பொதுவாகவே கலைக் கல்லூரியை ஆரம்பிக்கிற உத்தேசம் எதுவும் வைத்திருக்கவில்லை; செலவு செய்கிற சூழ்நிலையிலும் அரசு இல்லை.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தனியார்கள் நல்ல உள்ளத்தோடு அந்தப் பகுதியிலே கலைக் கல்லூரிகளை அவர்களாகவே தொடங்குவதற்கு முன் வருகிறார்கள். அப்படி அவர்கள் முன்வருகிற போது, அரசு அவர்களுக்கு அனுமதி வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கலைக் கல்லூரிகள் இப்போது அதிகமாக இருப்பதாகவே அரசு கருதுகிறது. தொழில் கல்லூரிகளில், தொழில் வாய்ப்புகள் தரக்கூடிய படிப்புப் பிரிவுகள் ஆரம்பித்தால், மாணவர்களுக்கு நல்ல பலன் கிடைக்குமென்று அரசு கருதுகிறது. ஆகவேதான், கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்க அரசு முயற்சிகள் எடுப்பதாக இல்லை, அத்தகைய முயற்சிகளை ஆதரிக்கிற நிலையிலும் இல்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும், தனிப்பட்டவர்கள் நிதியுதவி பெறாத நிலையில், அரசுக்கு எந்தவிதமான நிதி பாரத்தையும் அளிக்காத விதத்திலே ஆரம்பிக்க முன் வருவார்களேயானால், அதுபற்றி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிப்பார்கள்.